

உலக ஹெபடைட்டிஸ் தினத்தையொட்டி சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் இலவசமாக மஞ்சள் காமாலை தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் உள்ளார்.

# மியாட் ஆஸ்பத்திரியில் மாணவர்களுக்கு மஞ்சள் காமாலை இலவச தடுப்பூசி

சென்னை, ஜூலை.28-

சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் மஞ்சள் காமாலை தடுப்பூசி முகாம் நேற்று நடத்தப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட மாணவ-மாணவிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடப்பட்டது.

## மஞ்சள் காமாலை தடுப்பூசி

இன்று (திங்கட்கிழமை) உலக ஹெபடைட்டிஸ் தினம் ஆகும். இதையொட்டி சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் ஹெபடைட்டிஸ் (மஞ்சள் காமாலை) தடுப்பூசி இலவசமாக மாணவ-மாணவிகளுக்கு போடப்படுகிறது. இதற்காக நேற்றே முகாம் தொடங்கப்பட்டது. முகாமில் ஏராளமான மாணவிகள் கலந்துகொண்டு ஹெபடைட்டிஸ் தடுப்பூசி போட்டுக்கொண்டனர். இந்த நிகழ்ச்சி மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாக இணை இயக்குனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் முன்னிலையில் நடந்தது.

இதுகுறித்து மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்து இருப்பதாவது:-

## விழிப்புணர்வு

மியாட் மருத்துவமனைக்கு வரும் பெரும்பாலானோர், நோய் மிகவும் முற்றிய நிலையில் வருகிறார்கள். நோய்களின் பாதிப்பிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வது எப்படி என்பது குறித்து மக்களிடம் விழிப்புணர்வு இருந்திருந்தால் நோயை ஆரம்ப நிலையிலேயே குணப்படுத்த முடியும்.

நமது ஆரோக்கியத்தை பேணுவதற்கான அத்தியாவசிய காரணங்கள் குறித்து நாளைய பெற்றோர்களுக்கு அறிமுகப்படுத்துவதே அம்முயற்சியாகும். இதன் கீழ், 8-வது வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான 1,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், நோய்களை முன்கூட்டியே கண்டறிதல், நோய்களை தவிர்ப்பதற்கான வழிமுறைகள், குறிப்பாக ஜீரண மண்டலம் மற்றும் நுரையீரல் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வை பெறும்வகையில், மியாட் மருத்துவமனைக்கு இன்று வருகிறார்கள்.

## பரிசு

இதை இன்னும் ஆர்வமூட்டுவதாக மாற்றும் வகையில், நாங்கள் ஒரு புதிர் போட்டியை நடத்துகிறோம். ஒவ்வொரு பள்ளியைச் சேர்ந்த வெற்றியாளர்களுக்கும் பரிசுகளையும் வழங்க உள்ளோம். அக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் அதே இடத்தில் இலவச ஹெபடைட்டிஸ்பி தடுப்பு ஊசி இலவசமாக போடப்படும்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.